062368

6090

MCA

நிர்வாக இயக்குநர் ... -4 DEC 2008 ... சென்னை

சுருக்கம்

கோவை மாவட்டம் – கோவை தெற்கு வட்டம் – சிங்காநல்லூர் கிராமம் 14.40 ஏக்கர் நிலத்தினை கோவை மாநகராட்சி கழிவுநீர்ப் பண்ணை அமைக்க, நில எடுப்புச் சட்டம் அவசரப்பிரிவு 17(2)–ன் கீழ் நிலம் கையகப்படுத்துவதற்கு அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.2) துறை

அரசாணை (நிலை) எண் 236

நாள்:01.12. 2008

கார்த்திகை – 6
திருவள்ளுவர் ஆண்டு – 2039

படிக்கவும்:

JDCC
JCA
JNN

1. அரசாணை (3ப) எண்.25, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறை, நாள் 24.10.2007.
2. சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கடிதம் எண் எச்2/8227/2008, நாள் 10.04.2008.
3. கோயம்பத்தூர் மாவட்ட வருவாய் அலுவலரது கடிதம் எண் 40375/07/எப்2/ நாள் 26.07.2008.
4. கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரது கடிதம் எண் 12069/06/எம்.எச்.5, நாள் 01.09.2008

---

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ.377.13 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டத்தினை அமுல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. தற்போது இத்திட்டத்தின் ஒரு பகுதியான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு சிங்காநல்லூர் கிராமத்தில் 14.40 எக்கர் நிலத்தினை கையகப்படுத்த நிர்வாக அனுமதி வழங்கிட மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2) சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் இப்பொருள் குறித்த தமது அறிக்கையில், சிங்காநல்லூர் கிராமத்தில் கையகப்படுத்தவுள்ள 14.40 ஏக்கர் நிலத்தில் புல எண்.762/4 ஐ தவிர மற்ற அனைத்து நிலங்களும் புஞ்சை நிலங்கள் எனவும், புல எண்.762/4–ல் உள்ள 0.05 எக்கர் நிலம் "அரசு இட்டேரி புறம்போக்கு" என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும், இதனை கையகப்படுத்துவதற்கு முன் பொதுப்பணித்துறை அல்லது சம்பந்தப்பட்ட பஞ்சாயத்திடமிருந்து தடையின்மை சான்று பெறப்பட வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் இத்தடையின்மை சான்றினைப் பெற்று நேரிடையாக அரசுக்கு அனுப்பி வைக்குமாறு

அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி நிலங்களை கையகப்படுத்துவதற்கான செலவினங்கள் கீழ்க்கண்டுள்ளவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்:

| | |
|---|---|
| வழிகாட்டி மதிப்பின் அடிப்படையில் நிலத்தின் தோராய மதிப்பு | ரூ.12,65,73,500/- |
| கட்டிடம் மற்றும் மரத்தின் மதிப்பு | ரூ.35,150/- |
| மொத்தம் | ரூ.12,66,08,650/- |
| 30% ஆறுதல் தொகை | ரூ.3,79,82,595/- |
| 14.5% நிர்வாக செலவுத் தொகை | ரூ.1,83,58,254/- |
| விளம்பரத் தொகை | ரூ.25,000/- |
| மொத்தம் | ரூ.18,29,74,499/- அல்லது ரூ.**18,29,74,500/-** |

3) ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், இந்நில எடுப்புக்கான மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவினை தாம் ஏற்பதாகவும், மேலே பத்தி 2–ல் தெரிவிக்கப்பட்ட நிலத்தினை கோயம்பத்தூர் மாநகராட்சி கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு நில எடுப்பு சட்டம் 1894, அவசரப் பிரிவு 17(2)–ன்படி கையகப்படுத்த நிர்வாக அனுமதி வழங்குவதற்கு பரிந்துரை செய்வதாகவும் தெரிவித்துள்ளார்.

4) மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், கோயம்பத்தூர் மாவட்ட வருவாய் அலுவலர், கையகப்படுத்தவுள்ள மேற்படி நிலத்தில் அடங்கிய புல எண்.762/4–ல் உள்ள 0.05 ஏக்கர் நிலம் கோயம்பத்தூர் மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றும், இத்திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு இந்த 0.05 ஏக்கர் நிலத்தினையும் சேர்த்து மொத்தம் 14.40 ஏக்கர் நிலம் கையகப்படுத்த வேண்டும் என கோயம்பத்தூர் மாநகராட்சி தமது தீர்மானம் எண்.253, நாள் 21.01.2008–ல் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதால், இது குறித்து தனியே பொது பணித்துறையின் தடையின்மை சான்று தேவையில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

5) கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், அரசு ஆணை (3ப) எண்.25, நகராட்சி நிர்வாகம் (நநி3) துறை, நாள் 24.10.2007–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள ரூ.377.13 கோடியில், ஒண்டிப்புதூர், சிங்காநல்லூர் கிராமத்தில் உள்ள மேற்படி நிலத்தினை 60 MLD திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு

கையகப்படுத்துவதற்கான செலவுத் தொகை ரூ.18.29 கோடி அடங்கவில்லை எனவும், இச்செலவினத்தை மாநகராட்சியின் பொது நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதி வழங்குமாறும், மேலும் மேற்படி நிலத்தினை கையகப்படுத்த அரசு அறிவிக்கை வெளியிட்டபின் இப்பொருளினை மாமன்றம் முன் வைத்து இச்செலவினத்தை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள உரிய தீர்மானம் நிறைவேற்றப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

6) மேற்குறிப்பிட்ட சூழலில், கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒண்டிப்புதூர், சிங்காநல்லூர் கிராமத்தில் 60 MLD திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு புல எண்கள் 758/1 (பாகம்), 758/2 (பாகம்), 761/3ஏ, 761/3பி, 761/3சி, 761/3டி, 762/2, 762/3ஏ, 762/3பி, 762/3சி, 762/4 மற்றும் 762/5–ல் உள்ள 14.40 ஏக்கர் நிலத்தினை கையகப்படுத்துவதற்கு ஆகும் உத்தேச செலவு ரூ.18,29,74,500/–ஐ (ரூபாய் பதினெட்டு கோடியே இருபத்தொன்பது இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து ஐந்நூறு மட்டும்) கோயம்புத்தூர் மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து, மேற்கொள்ள, அம்மாநகராட்சி மாமன்றம் ஒப்புதல் அளித்து தீர்மானம் நிறைவேற்றுதலுக்கு உட்பட்டு, நில எடுப்புச் சட்டம் 1894, அவசரப் பிரிவு 17(2)ன் படி கையகப்படுத்துவதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை – 5.
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 5.
மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர்.
ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி.
மாவட்ட வருவாய் அலுவலர், கோயம்புத்தூர்.
இயக்குநர், உள்ளாட்சிகள் நிதித் தணிக்கை, சென்னை – 108.
மாநிலக் கணக்காயர் (பெயரில்), சென்னை – 18/35.

நகல்
நிதித்துறை, சென்னை – 9
வருவாய்த்துறை, சென்னை – 9
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் சிறப்பு நிலை
நேர்முக உதவியாளர், சென்னை –9.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.நி II) துறை, சென்னை – 9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்